**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 66/2025 - PW-7**

| | |
|---|---|
| Name | திரு. பாண்டியன் |
| Husband/Father Name | மணி |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | பொறியாளர் |
| Age | 32 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.01.2026.

**(எதிரிகள் 2, 5 ஆஜர். எதிரிகள் 3, 4 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 16.01.2025 அன்று மாலை 5.15 மணிக்கு நானும் விஜய கணபதி, தமிழரசன் மற்றும் எங்கள் ஊரை சேர்ந்த நண்பர்களுடன் திருமால்பூர் அரசினர் மேல்நிலை பள்ளியில் கிரிக்கெட் விளையாடினோம். பிறகு விஜய கணபதியும் தமிழரசனும் வீரகசீரக நதி பாலத்திடம் சென்று விட்டார்கள். நான் அங்கே நின்று கொண்டிருந்தேன். அப்போது சங்கருடையுய அம்மா கோகிலா என்பவர் என்னிடம் வந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது அலரல் சத்தம் கேட்டது. நானும் கோகிலாவும் சத்தம் கேட்ட இடத்துக்கு ஓடினோம். அப்போது தமிழரசனும் விஜயகணபதியும் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தார்கள். அப்போது நான் கட்டிருந்த லுங்கியையும் கோகிலா என்பவர் தன்மீது அணிதிருந்த டவலாலும் தீயில் எரிந்து கொண்டிருந்த தமிழரசனையும் விஜயகணபதியையும் அணைத்தோம். பிறகு சங்கரிடம் என்ன நடந்தது என்று கேட்டோம். சங்கர் தானும் மணிகண்டனும் பணப்பாக்கம் சென்று பெட்ரோல் வாங்கி வந்ததாகவும் அப்போது வீரகசீரக நதி பாளத்தின் மீது நானும், தமிழரசன் மற்றும் விஜயகணபதி நின்று பேசிக் கொண்டிருந்த போது அங்கு பிரேம்குமார் மற்றும் அவருடன் 3 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். பிரேம்குமார் என்பவர் தமிழரசனின் இருசக்கர வாகனத்தை எட்டி உதைத்தார். அப்போது தமிழரசன் கீழே விழுந்து விட்டார். அப்போது இதை தடுத்த விஜயகணபதி முகத்தில் பிரேம்குமார் கையால் குத்தினார். சங்கரிடமிருந்த பெட்ரோல் பாட்டிலை

பிடுங்கி தமிழரசன் மீதும் விஜயகணபதி மீதும் ஊற்றி கொளுத்தி விட்டு பிறகு பிரேம்குமாரும் உடன் இருந்தவர்களும் ஓடிவிட்டனர். பிறகு சத்தம் கேட்டு நானும் கோகிலாவும் அங்கு வந்தோம். காயம்பட்ட தமிழரசனை அவருடைய மாமா காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு முதலில் அழைத்து சென்றார். அங்கிருந்த பிறகு சென்னையிலுள்ள கீழ்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

பானாவரம் போலீசார் என்னை 17.01.2025 அன்று பானாவரம் காவல் நியைலத்தில் விசாரித்தார்கள்.பானாவரம் காவல் நிலையத்துக்கு என்னை வர சொன்னதன் அடிப்படையில் நான் சென்றேன். நெமிலி காவலர் தான் என்னை காவல் நிலையத்துக்கு வரச் சொன்னதாக தகவல் கூறினார். எனக்கு நெமிலி காவலர் காலை 11 மணி அளவில் தகவல் சொன்னார். நாங்கள் கிரிக்கெட்டை பள்ளிக்கு உள்ளே விளையாடிக் கொண்டிருந்தோம். கிரிக்கெட் முடிந்த பிறகு தமிழரசனும் விஜயகணபதியும் சென்றுவிட்ட பிறகு நானும் எனது நண்பர்களும் பள்ளிக்கு உள்ளேயே கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தோமா என்றால் ஆமாம். பள்ளியை சுற்றி காம்பவுண்டு உள்ளது என்று சொன்னால் சரிதான். கோகிலா திருமால்பூர் போகும் வழியில் மேற்படி பள்ளி அருகே என்னை பார்த்தார் நேரம் எனக்கு நினைவில்லை. வீரகசீரக நதி பாலத்துக்கு அருகே பேசிக் கொண்டிருந்த தமிழரசனும் விஜயகணபதியும் மற்றும் நாங்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த இடத்துக்கும் இடையே உள்ள தொலைவு எவ்வளவு என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் பள்ளியில் விளையாடிக் கொண்டிருந்த இடத்திலிருந்து தெற்கு திசையில் தமிழரசனும் விஜயகணபதியும் வீரகசீரக பாலத்துக்கு அருகே பேசிக் கொண்டிருந்தார்கள். தமிழரசனுக்கும் விஜயகணபதிக்கும் எவ்வாறு தீப்பற்றியது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றும் அதை நான் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் காம்பவுண்டுக்கு உள்ளேயும் கோகிலா காம்பவுண்டுக்கு வெளியேவும் இருந்தார் என்று சொன்னால் சரிதான். கோகிலா என்னை அழைத்ததும் நான் காம்பவுண்டு அருகே வந்து பேசினேன். நான் சத்தம் கேட்டு வீரகசீரக நதி பாலத்து அருகே ஓடும் போது பொது மக்கள் கூடி இருந்தார்களா என்றால் இல்லை. வீரகசீரக நதி பாலத்துக்கு தெற்கே 20 அடி தொலைவில் ஒரு பெரிய ஆலமரம் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆலமரத்து அருகே அன்று காணும் பொங்கல் திருவிழா நடைப்பெற்றதா என்றால் இல்லை பேருந்து நிறுத்ததின் அருகே தான் நிகழச்சி நடைப்பெற்றது. வீரகசீரக நதி பாலத்திலிருந்து எவ்வளவு தொலைவில் மேற்படி நிகழ்ச்சி நடைப்பெற்றது என்றால் தெற்கு திசையில் நடைப்பெற்றது. தொலைவு பற்றி என்னால் சரியாக கூற முடியவில்லை. வீரகசீரக நதி பாலம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி உள்ளது. நெல்வாய்க்கு

போகும் வழி வடக்கு நோக்கி செல்கிறது. வீரகசீரக நதி பாலத்திலிருந்து பணப்பாக்கம் நோக்கி எந்த திசையில் செல்ல வேண்டும் என்றால் முதலில் தெற்கே சென்று பிறகு மேற்கே செல்ல வேண்டும். பள்ளூரிலிருந்து பணப்பாக்கம் செல்லும் சாலை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்கிறது. மேற்படி ஆலமலரத்துக்கு அருகே உள்ள பள்ளிக்கு எதிரே பெட்ரோல் விற்கிறார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சம்பவம் நடந்த போது நான் அங்கே இல்லை என்றும் அதனால் தான் என்னால் தொலைவை பற்றி கூறமுடியவில்லை என்றும் சொன்னால் நான் காப்பாற்றியதற்கான தீக்காயம் எனக்கு இடது கையிலும் வலது தொடையிலும் ஏற்பட்டதால் நான் அங்கு தான் இருந்தேன். சாட்சி இடது கையிலும் ஏற்பட்ட தீக்காயத்தை நீதிமன்றத்தில் காண்பித்தார். மேற்படி தீக்காய்த்துக்கு நான் சிகிச்சை எடுத்தது சம்மந்தமான ஆவணத்தை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. வலது தொடையில் ஏற்பட்ட தீக்காயம் போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் கூறியுள்ளேன். நான் நீதிமன்றத்தில் காண்பித்த இடது கையில் ஏற்பட்ட தீக்காயம் மேற்படி சம்பவத்தின் போது ஏற்படவில்லை என்றும் வேறு எப்போதோ ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.20 18:46:31 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.